12th August 1960]

(ஆ) அப்படியானால் என்ன வட்டியில், எவ்வளவு தொகை, எந்த ஜாமீன் பேரில், எப்போது, எவ்வளவு காலத் தவணையில் கொடுக்கத் திட்டமிட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No, Sir.

(b) Does not arise.

Briquetting Factory

* 142 Q.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரில் நிலக்கரி (கட்டி கரி) தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

(ஆ) அப்படியாயின், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) The details have not been worked out yet.

Sugar Factory

* 143 Q.—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திருமங்கலம்கோட்டைப் பகுதியில் கூட்டுறவு முறையில் கரும்பாலை துவக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

SRI A. VEDARATHNAM : இந்த திருமங்கலக்கோட்டைப் பகுதியில் கரும்பு உற்பத்தி செய்வதற்கு ஏராளமான வசதி இருக்கிறதே அதை பயன்படுத்திக்கொண்டு அங்கே ஒரு கூட்டுறவு முறையில் ஆலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்பதைப்பற்றி ஆலோசிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கூட்டுறவு முறையில் அங்கே ஆலையை அமைக்க வேண்டுமானால் அங்கே இருக்கிற விவசாயிகள் முன்வந்து அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கனம் வேதாரத்னம் போன்றவர்கள் அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டு சர்க்காருக்குத் தெரியப்படுத்தினால் அதை கவனிப்பார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

SRI M. D. THIAGARAJA PILLAI : தனிப்பட்ட முறையில் அங்கே ஒரு ஆலையை ஆரம்பிக்க வேண்டும் என்று முயற்சி எடுத்துக்கொண்டு அது நடைபெறவில்லை. அதனால் மற்றவர்கள் ஆலையை அங்கு ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதிக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எல்லா ஆலைகளையும் ஆரம்பிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.